# முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம்

## முன்னேற்ற அறிக்கை – 2014

## செலவினத் தலைப்பு - 202

முஸ்லிம் கலாச்சார பண்பாட்டலுவல்கள் திணைக்களம்

இல.180, டி.பி ஜாயா மாவத்தை

கொழும்பு - 10.

## இலக்கு

இலங்கை நாட்டுக்குல் இஸ்லாமிய கலாசார விழுமியங்கள் நிறைந்த ஒரு முஸ்லிம் சமூகத்தை உருவாக்கல்.

## நோக்கம்

இலங்கை வாழ் முஸ்லிம் சமுதாயத்தின் உயர்வுக்காவும், நலன் கருதியும் சகல நடவடிக்கைகளையும் ஒன்றினைத்து முஸ்லிம் சமய கலாச்சார ஸ்தாபனங்களை தொடர்புபடுத்தலும் அத்தோடு அமுல்படுத்தலும் மற்றும் வக்ப் சட்டத்திட்டங்களை அமுல்படுத்தல் மூலம் மிகவும் உன்னதமான முஸ்லிம் சமுதாயமொன்றை உருவாக்க வழிவகுத்தல்.

## பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| 01. அறிமுகம் | 04 |
| 02. திணைக்களத்தின் குறிக்கோள்களும், செயற்பாடுகளும் | 05 - 06 |
| 2.1. குறிக்கோள் | |
| 2.2. திணைக்களத்தின் செயற்பாடுகள் | |
| 03. ஒழுங்கமைப்பு வடிவம் | 07 |
| 04. திணைக்கள உத்தியோகத்தர்கள் விபரம் | 08 |
| 4.1. அனுமதிக்கப்பட்ட உத்தியோகத்தர் குழாம் | |
| 4.2. வருடாந்த உத்தியோகத்தர்கள் குழாம் மாற்றங்கள் | |
| 05. நிருவாக மற்றும் அபிவிருத்திப்பிரிவால் ஆற்றப்பட்ட கடமைகள் | 09 - 11 |
| 5.1. நிருவாகப் பிரிவால் செய்யப்பட்ட கடமைகள் | |
| 5.1.1. பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | |
| 5.5.2. வெளிநாட்டு பயிற்சித்திட்டங்கள் | |
| 5.2. அபிவிருத்திப்பிரிவால் செய்யப்பட்ட நடவடிக்கைகள் | |
| 06. நிதிப்பிரிவால் செய்யப்படும் கடமைகளும் அறிக்கைகளும் | 12 - 13 |
| 6.1. நிதிப்பிரிவால் செய்யப்படும் கடமைகள் | |
| 6.2. நிதி அறிக்கைகள் | |
| 6.2.1. மீண்டுவரும் | |
| 6.2.2. மூலதனம் | |
| 6.2.3. முற்பணக் கணக்குகள் | |
| 07. சமய மற்றும் கலாசார பிரிவினால் நிறைவேற்றப்படும் பணிகளாவன | 14 - 15 |
| 08. வக்பு மற்றும் பள்ளிவாசல்கள் நிருவாகப் பிரிவால் நடாத்தப்பட்ட செயல்கள் | 16 |
| 09. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு மற்றும் புலனாய்வு பிரிவால் செய்யப்படும் நடவடிக்கைகள். | 16 |
| 10. திணைக்களத்தின் கடமைச் செயற்பாட்டுக் கெதிரான தடைகளும் இடர்களும் | 17 |

## 01. அறிமுகம்

புத்தசாசன மற்றும் மத விவகார அமைச்சின் கீழ் இயங்கும் முஸ்லிம் சமய கலாசார அலுவலகம் முஸ்லிம்களது கலாசாரத்தினையும் பண்பாட்டினையும் விருத்தி செய்யும் ஒரு திணைக்களமாக செயற்படுகின்றது.

இலங்கையினுள் இஸ்லாமிய மத விழுமியங்கள் மற்றும் கலாசார மகிமைகளைக்கொண்ட ஒரு உன்னதமான முஸ்லிம் சமுதாயமொன்றை உருவாக்கும் இலக்கினைக்கொண்ட இத்திணைக்களம் முஸ்லிம் சமுதாயத்தின் நலன் கருதிப் பொறுப்பு வாய்ந்த ஒரு நிறுவனமாக செயற்பட்டு வருகின்றது.

1962ம் ஆண்டு 21 ம் இலக்க மற்றும் 1982ம் ஆண்டு 33ம் இலக்க சட்டத்தின் கீழ் திருத்தியமைக்கப்பட்ட 1956ஆம் ஆண்டு 51ம் இலக்க வக்ப் சட்டத்தினை இலக்காகக்கொண்டு செயற்படுத்துவதற்காக இலங்கை வக்ப் சபை மற்றும் வக்ப் நியாய சபை ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இவற்றுடன் நெருங்கிய தொடர்பினை ஏற்படுத்துவதன் மூலம் வக்ப் சட்டத்தினை நோக்காகக் கொண்டு முஸ்லிம் பள்ளிவாயில்கள் மற்றும் மத ஸ்தாபனங்களை பதிவு செய்தல், பதிவு செய்யப்பட்ட முஸ்லிம் புனித ஸ்தாபனங்கள், முஸ்லிம் தரும நம்பிக்கைப் பொறுப்புக்கள் மற்றும் நம்பிக்கைப் பொறுப்பாளர்களின் பொறுப்புக்களும், அதிகாரங்களும் செயல்பாடுகளும் முஸ்லிம் தரும நிதியங்களை சரியான முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு உரிய நிருவாகத்தை செயற்படுத்தல் போன்ற விடயங்கள் இத்திணைக்களத்தின் செயற்பாட்டிற்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது. வக்ப் சட்டத்தில் காணப்படும் நிருவாக நடவடிக்கைகள் அனைத்தும் உள்ளடக்கியதாக முஸ்லிம் சமய பண்பாட்டின் தனித்துவத்தை பேணும் வகையில் உரிய நடவடிக்கை மேற்கொண்டு மனித சமூகத்தின் நலன்கருதி அனைத்து செயலாற்றலை மேற்கொண்டு வருகின்றது.

## 02. திணைக்களத்தின் குறிக்கோள்களும், செயற்பாடுகளும்

### 2.1 குறிக்கோள் :

1. முஸ்லிம் பள்ளிவாசல்கள் தரும நம்பிக்கை நிதியங்கள் என்பவற்றின் சொத்துக்களை மேற்பார்வை செய்தல்.
2. இஸ்லாமிய நிறுவனங்களையும் அவற்றின் சொத்துக்களையும் பரிபாலித்தலும் வழிநடத்தலும்.
3. இஸ்லாமிய மார்க்கக் கல்வியினை வளர்த்தலும் மேம்படுத்தலும்.
4. இஸ்லாமிய கலாசார நிகழ்ச்சிகளை மேம்படுத்தலும், வளர்த்தலும்.
5. ஹஜ் கடமையினை நிறைவேற்ற செல்வோர்களது தேவையிகளை பூர்த்தி செய்தல்.
6. மார்க்க விடயங்களிலும் கலாசார விடயங்களிலும் பங்களிப்புச் செய்தவர்களை கௌரவித்தல்.
7. முஸ்லிம்கள் அவர்களது மத அனுஷ்டானங்களை மேற்கொள்ள வேண்டிய ஏற்பாடுகளை செய்து கொடுத்தல் (ஐவேளை தொழுகை, நோன்பு நோற்றல்)
8. சமகால விடயங்கள் தொடர்பாக விளக்க நிகழ்சிகளை நடாத்துதலும் வழிகாட்டுதலை வழங்கலும்.
9. முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் ஒற்றுமையினை வழிப்படுத்தலும் தேசிய ஒருமைப்பாட்டிற்காக உழைத்தலும்.

### 2.2 திணைக்களத்தின் செயற்பாடுகள்

01. முஸ்லிம் பள்ளிவாசல்கள் மற்றும் மத ஸ்தாபனங்களை பதிவு செய்தலும், நம்பிக்கையாளர்களை நியமித்தலும்.

02. முஸ்லிம் பள்ளிவாசல்கள் தரும நம்பிக்கை நிதியங்கள் என்பவற்றை பரிபாலித்தல், வக்பு சட்டத்தினை நடைமுறைப்படுத்தல்.

03. பதிவு செய்யப்பட்ட முஸ்லிம் பள்ளிவாசல்கள், அஹதியா(தஹம்) பாடசாலைகள், அரபுக்கல்லூரிகள், குர்ஆன் மத்ரஸாக்கள் உள்ளிட்ட சமய நிறுவனங்களை அபிவிருத்தி செய்வதற்காக நிதி உதவிகளை வழங்குவதன் மூலம் அவற்றினை மேம்படுத்தல்.

04. புனித ரமழான் மாதத்தில் முஸ்லிம் நாடுகளில் இருந்து அன்பளிப்பாக எமது நாட்டுக்கு கிடைக்கப்பெறுகின்ற பேரீத்தம் பழங்களை மாவட்ட மட்டத்தில் உள்ள பிரதான பள்ளிவாசல்கள் மூலம் இலங்கையில் உள்ள அனைத்து முஸ்லிம்களுக்கும் கிடைக்கும் வகையில் விநியோகித்தல்.

05. தேசிய மீலாதுன் நபி தினத்தை குறிக்குமுகமாக ஒவ்வொரு வருடமும் இலங்கையில் உள்ள ஒரு மாவட்டத்தை தெரிவு செய்து அம் மாவட்டம் முழுவதும் சமய, சமூக ரீதியிலான அபிவிருத்திகளை ஏற்படுத்தல். அதில் குறித்த பிரதேசத்தில் உள்ள முஸ்லிம் பள்ளிவாசல்கள், சமய நிறுவனங்கள், முஸ்லிம்” முஸ்லிம் அல்லாத பாடசாலைகளை அபிவிருத்தி செய்தல், மீலாத்தின போட்டி நிகழ்ச்சிகள், வெற்றிபெற்ற போட்டியாளர்களுக்கு பரிசு வழங்கும் நிகழ்ச்சிகள், முன்னோடிகளையும் மத போதகர்களையும் கௌரவித்தல், அம்மாவட்ட வரலாற்றுப் புத்தக வெளியீடு, நினைவு மலர் வெளியீடு போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் நடாத்தப்படுகின்றன. இதற்காக இம்முறை இரத்தினபுரி மாவட்டம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

06. இலங்கை வாழ் முஸ்லிம்கள் புனித ஹஜ் யாத்திரையை மேற்கொள்வதற்கு தேவையான ஏற்பாடுகளை பின்வருமாறு மேற்கொள்கிறது.
    - பொருத்தமான முகவர்களை பதிவு செய்தலும், அனுமதிப்பத்திரம் வழங்களும்.
    - ஹஜ்யாத்திரிகளுக்கான வழிகாட்டல், நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்தல்.

- ஹஜ் வழிகாட்டி புத்தக வெளியீடும், விநியோகமும்.
- ஹஜ்யாத்திரிகளுக்கான விமான போக்குவரத்து சேவைகளை ஏற்பாடுகள்.
- ஹஜ்யாத்திரிகளுக்கு சவுதி அரேபியாவில் தரித்திருக்கும் காலப்பகுதியில் தேவையான வழிகாட்டல்களும், உதவிகளும் செய்தல்.
- சவுதி அரேபியாவில் ஹஜ்யாத்திரிகளுக்கு தேவையான மருத்துவ வசதிகளை இலங்கை மருத்துவர்களால் வழங்குதல்.
- விமான நிலையத்தில் ஹஜ்ஜாஜிகளுக்கான உதவிகளையும் வழிகாட்டுதல்களையும் வழங்குதல் (கட்டுநாயக – ஜித்தா)
- ஹஜ் முகவர்கள் வழங்கும் சேவைகளை மேற்பார்வை செய்தலும், குறைகளை நிவர்த்தி செய்தலும்

07. இலங்கையில் உள்ள அஹதியா பாடசாலை ஆசிரியர்களுக்கான சீருடை, கொடுப்பனவு, புத்தக கொடுப்பனவு, என்பன வழங்குவதுடன் அவர்களுக்கான பயிற்சி நெறிகள், கருத்தரங்குகளை நடாத்தல், அஹதியா பாடசாலைகளுக்கு பாடத்திட்டம் ஒன்றை அறிமுகம் செய்தல்.

08. முஸ்லிம் நலன்புரி சங்கங்களை பதிவு செய்தலுடன் அவற்றை பரிபாலித்தலும்.

09. இஸ்லாமிய பாலர் பாடசாலை ஆசிரியர்களை பயிற்றுவித்தலும், தேவையான வழிகாட்டல்களை வழங்களும்.

10. முஸ்லிம் கலை, இலக்கிய வாதிகளை கௌரவிக்கும் முகமாக ஆண்டுதோரும் விருது வழங்கும் வைபவம் ஒன்றை ஏற்பாடு செய்து கலாபூஷண விருது வழங்கல். (இவ்விருது கலாசார திணைக்களத்துடன் இணைந்து வழங்கப்படுகின்றது.)

11. முஸ்லிம் எழுத்தாளர்களை ஊக்கப்படுத்தும் முகமாக அவர்களது படைப்புக்களான புத்தகங்களை கொள்வனவு செய்து முஸ்லிம் பாடசாலைகளில் உள்ள நூலகங்களுக்கு விநியோகித்தல்.

12. பள்ளிவாசல்களின் நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்களுக்கும், இஸ்லாமிய மத ஸ்தாபனங்களின் பரிபாலன சபை உறுப்பினர்களுக்கும் கருத்தரங்குகள் பயிற்சிகள் நடாத்தல்.

13. சர்வதேச ரீதியாக நடாத்தப்படுகின்ற கிராஅத் போட்டிகளுக்கான போட்டியாளர்களை தெரிவு செய்தல், இப்போட்டிகளில் வெற்றிபெற்றவர்களை வருடாந்தம் எகிப்து, ஈரான், ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய நாடுகளுக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுத்தல்.

14. இஸ்லாமிய உயர் கல்விக்காக மாணவர்களை தெரிவு செய்தல்.

15. மௌலவிமார்களுக்கான விசேட அடையாள அட்டை வழங்குதல்.


16. வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக சவூதி அரேபிய நாட்டிற்கு செல்லும் இஸ்லாமியர்களை முஸ்லிம் என உறுதி செய்து மதச் சான்றிதழ் வழங்குதல்.

## 3. ஒழுங்கமைப்பு வடிவம்

மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளை செயற்படுத்துவது தொடர்பாக முக்கிய 5 பிரிவுகளை உள்ளடக்கியதாக இத்திணைக்களம் ஒழுங்கமைப்பின் கட்டமைப்பு தயாரிக்கப்பட்டுள்ளதுடன், குறிப்பிட்ட பிரிவுகள் கீழ்வருமாறு.

1. நிருவாக மற்றும் அபிவிருத்தி பிரிவு
2. நிதிப்பிரிவு
3. மத, மற்றும் கலாசார பிரிவு
4. வக்ப் பிரிவு
5. உள்ளகக்கணக்காய்வு பிரிவு

## ஒழுங்கமைப்பு கட்டமைப்பு
## முஸ்லிம் கலாச்சார பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம்.



## 4. திணைக்கள உத்தியோகத்தர்கள் விபரம்

### 4.1. அனுமதிக்கப்பட்ட அலுவலக குழாம்

**திணைக்களத்தின் ஒழுங்கமைப்பின் கட்டமைப்பின் கீழ் அனுமதிக்கப்பட்ட 117 அலுவலர்களைக் கொண்ட 2014.12.31 ஆம் திகதிக்குரிய அலுவலர்களின் விபரம் கீழ்வருமாறு**

| இல | பதவி | அனுமதிக்கப் பட்ட பதவிகளின் எண்ணிக்கை | சேவையில் உள்ளவர்களின் எண்ணிக்கை | | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| | | | நிரந்தர | தற்காலிக | |
| 01 | பணிப்பாளர் | 01 | 01 | - | 0 |
| 02 | கணக்காளர் | 01 | 01 | - | 0 |
| 03 | பிரதி/உதவிப்பணிப்பாளர் (இ.நி.சேவை) | 02 | 01 | - | 01 |
| 04 | பிரதி/உதவிப்பணிப்பாளர் (இ.நி.சேவை அல்லாத) | 02 | 0 | - | 02 |
| 05 | நிருவாக உத்தியோகத்தர் | 01 | 0 | - | 01 |
| 06 | மொழி பெயர்ப்பாளர் (சிங்களம் /தமிழ்) | 01 | 0 | - | 01 |
| 07 | வக்ப் சபை செயலாளர் | 01 | 0 | - | 01 |
| 08 | வக்ப் நியாய சபை செயலாளர் | 01 | 0 | - | 01 |
| 09 | புலனாய்வு உத்தியோகத்தர் | 02 | 0 | - | 02 |
| 10 | கலாச்சார உத்தியோகத்தர் | 03 | 03 | - | 0 |
| 11 | கலாசார உதவியாளர் | 15 | 08 | - | 07 |
| 12 | தர்மநிதி உதவியாளர் | 01 | 01 | - | 0 |
| 13 | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 50 | 24 | - | 26 |
| 14 | முகாமைத்துவ உதவியாளர் | 20 | 16 | - | 04 |
| 15 | சாரதி | 03 | 03 | - | 0 |
| 16 | அலுவலக உத்தியோகத்தர் சேவை | 13 | 15 | - | 02 (மேலதிகம்) |
| | **மொத்தம்** | **117** | **73** | | **44** |

### 4.2. உத்தியோகத்தர்கள் மாற்றங்கள்

**2014 வருடத்தில் உத்தியோகத்தர் மாற்றங்கள்**

| | | |
|---|---|---|
| இடமாற்றங்கள் | வருகை | 04 |
| | வெளியேறல் | 04 |
| நியமனங்கள் | நிரந்தர | 12 |
| | தற்காலிக | - |
| பதவி உயர்வு | - | |
| சேவையை குறைத்தல் | - | |
| சேவை விட்டுவிடல் | - | |
| இராஜினாமா | 02 | |
| ஓய்வு பெறல் | 01 | |
| இரத்தல் | - | |
| வேறு | - | |

## 05. நிருவாக மற்றும் அபிவிருத்திப்பிரிவால் ஆற்றப்பட்ட கடமைகள்

### 5.1 நிருவாகப் பிரிவால் ஆற்றப்படும் கடமைகள்

திணைக்களத்தின் அனைத்து பதவிகள் மற்றும் சேவைகள் அதாவது நியமனம் - ஓய்வு பெறல், இடமாற்றங்கள், பதவி உயர்வுகள், ஒழுக்காற்று நடவடிக்கைகள் மற்றும் சேவை நீடிப்பு போன்ற நிர்வாக செயற்பாடுகள் புத்தசாசன மற்றும் சமய அலுவல்கள் அமைச்சுடனும் அரசாங்க நிருவாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழு ஆகியவற்றுடனும் இணைந்து நடைமுறைப்படுத்துகின்றது.

- ❖ திணைக்களத்துடன் தொடர்புடைய ஆட்சேர்ப்புத்திட்டங்களைத் தயாரித்து அவற்றை சிபாரிசு மற்றும் அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்தல்.
  - ❖ பிரத்தியேகக் கோவைகளைப் பேணுதல்
  - ❖ தபால்
  - ❖ உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விடுமுறை தொடர்பான விடயங்கள்
  - ❖ புகையிரத ஆணைச்சீட்டுகள் மற்றும் புகையிரத பருவகாலச்சீட்டுகள் தொடர்பிலான கடமைகள்
  - ❖ வாகனங்களை பேணுதல், போக்குவரத்து வசதிகளை செய்து கொடுத்தல்
  - ❖ உசாவுநர் குழுக்களுக்கான விடைகளை வழங்குதல்
  - ❖ தேர்தல் கடமைகள்
  - ❖ பயிற்சிக்கான நிகழ்ச்சித்திட்டங்களை வடிவமைத்தலும் அந்நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பயிலுநர்களை அனுப்பி வைத்தல்
  - ❖ பாராளுமன்ற வினாக்களுக்கு விடைகளை சமர்ப்பித்தல்
  - ❖ அலுவலக சாதனங்கள் தொடர்பிலான பேணல்
  - ❖ அலுவலக கட்டடத்தைப் பேணுதல்
  - ❖ "அக்ரஹார" காப்புறுதி சார்ந்த வேலை
  - ❖ கடன் முற்பணங்களை அங்கீகரித்தல்

#### 5.1.1 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

**2014 ஆம் ஆண்டில் மு.ச.ப.அ.திணைக்கள உத்தியோகத்தர்கள் பங்குபற்றிய உள்ளூர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்**

| தொ. இல | பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்திய நிறுவனம் | பங்கு கொண்ட உத்தியோகத்தர் களின் எண்ணிக்கை | காலம் (நாட்கள்) |
|---|---|---|---|---|
| 1 | அலுவலக முகாமைத்துவம் சம்பந்தமாக புதிய உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சி திட்டம் | இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனம் | 02 | 02 |
| 2 | வியாபார கடிதம் எழுதுதல் திறமையை விருத்தி செய்வதற்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம | இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனம் | 02 | 01 |
| 3 | ஓய்வூதிய கொடுப்பனவு தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனம் | 01 | 02 |
| 4 | தேசிய முகாமைத்துவ கருத்தரங்கு | இலங்கை முகாமைத்துவ நிறுவனம் | 01 | 180 |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | அரச கணக்கு திட்டங்கள் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம். | இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனம் | 02 | 1 |
| 6 | சகவாழ்வுத்திறன் சம்பந்தமான பயிற்சி நிகழச்சித்திட்டம் | இலங்கை மன்ற நிறுவனம் | 01 | 03 |
| 7 | அரச கரும மொழி பயிற்சி நிகழச்சித்திட்டம் | அரச கரும மொழித் திணைக்களம் | 01 | 06 மாதம் |
| 8 | அலுவலக முறைமைகள்" அரச நிதி முறைகள் தொடர்பாக பயிற்சி நிகழ்ச்சி திட்டம் | இலங்கை மன்ற நிறுவனம் | 50 | 01 |

### 5.1.2 வெளிநாட்டு பயிற்சித்திட்டங்கள்

| தொடர. இல | பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | நடந்த இடமும் நாடும் | பங்கு பற்றிய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | காலம் |
|---|---|---|---|---|
| 01 | உலக இஸ்லாம் குழுக்கள் மற்றும் இமாம்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | அல் அஸ்கர் பல்கலைக்கழகம் எகிப்து | 01 | 03 மாதங்கள் |


### 5.2 அபிவிருத்திப்பிரிவால் செய்யப்பட்ட நடவடிக்கைகள்

- ❖ முஸ்லிம் பள்ளிவாசல்களுக்கான மேம்படுத்தலும் அபிவிருத்தியும்
- ❖ அஹதியா பாடசாலைகள், அரபுப்பாடசாலைகள் மற்றும் குர்ஆன் மத்ரஸாக்களுக்கான அபிவிருத்தி மற்றும் மேம்படுத்தல்

**நாடளாவிய ரீதியில் உள்ள வணக்கஸ்தலங்களுக்கான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்**

| மத நிறுவனம் | 2014 ஆம் ஆண்டுக்காக மூலதனச் செலவினம் (ரூ.மிலலியன்) | இலக்குக்கு உட்பட்ட மதஸ்தலங்களின் எண்ணிக்கை | 2014.12.31 வரைக்குமான முன்னேற்றம் | |
|---|---|---|---|---|
| | | | பௌதீக | நிதிசார் (ரூ.மில்லியன்) |
| 1. முஸ்லிம் பள்ளிவாசல் | 5.1 | 48 | 43 | 5.05 |
| 2. அரபுப் பாடசாலை | 0.38 | 04 | 03 | 0.20 |
| 3. அஹதியாப் பாடசாலை, ஹிப்ளுல் குர்ஆன் மத்ரஸா மற்றும் வேறு மத நிறுவனம் | 0.51 | 08 | 07 | 0.50 |

- ❖ ஆண்டு மீலாத் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை ஒழுங்கு செய்வதும் அதனை செயன்முறைப்படுத்துவதும் - 2014 ம் ஆண்டு காலத்தின் போது இந்நிகழ்ச்சித்திட்டத்துக்கென களுத்துறை மாவட்டம் தெரிவு செய்யப்பட்டு, செயன்முறைப்படுத்தப்பட்டதுடன் பின்வரும் விதத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகள் நடாத்தப்பட்டன. இதற்காக ரூபா' மில்லியன் 13 ஒதுக்கப்பட்டுள்ளதுடன் கீழ்வருமாறு அபிவிருத்தி செய்யப்பட்டது.




❖ **“தயட்ட கிருல” அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்**

2014.02.20 தொடக்கம் 2014.03.02 வரையும் குருநாகலை தொழில்நுட்ப நிலையம் மற்றும் வயம்ப பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்ற நாட்டின் நாளைய வெற்றிக்கான புதுமையான புத்தெழுச்சி “தயட்ட கிருல” கண்காட்சியில் திணைக்களத்தின் மூலம் காட்சிக் கூடம் ஒன்று நடாத்தப்பட்டு திணைக்களத்தின் கடமைகள் மட்டில் பொது மக்கள் பங்கு பற்றிய விழிப்புணர்ச்சி தொடர்பில் மக்களிடையே நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் திணைக்களத்தினதும் முஸ்லிம் சமய மற்றும் கலாச்சாரத்தின் தனித்தன்மை உணர்த்தப்பட்டது.

❖ **உத்தேச முஸ்லிம் கலாச்சாராத்தொகுதியின் நிர்மானப்பணி**

இல.180, டீ.பீ.ஜாயா மாவத்தை, கொழும்பு 10 இல் 2006.11.09 ம் ஆண்டு கட்டிட நிர்மானம் ஆரம்பிக்கப்பட்டு இன்றுவரை உத்தேச முஸ்லிம் கலாச்சாரத் தொகுதியின் நிர்மானப்பணிகளுக்கு மதிப்பிடப்பட்ட செலவினம் ரூ.596 மில்லியனாகும். இத்தொகுதிக்கான நிர்மாணப்பணி மத்திய எந்திரவியல் கட்டுவேலை பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ம.எ.க.ப.)

09 மாடிகளைக் கொண்ட இக்கட்டிடம் முஸ்லிம் சமய கலாச்சார அலுவல்கள் திணைக்கள அலுவலகம், இலங்கை வக்பு சபை அலுவலகம், வக்பு நியாய சபை, சகல வசதிகளும் கொண்ட கேட்போர் கூடம், நூலகம், தங்குமிடம் அறைகள் மற்றும் வாகனத்தரிப்பிடம் என்பவற்றை கொண்டதாக நிர்மானிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இத்தொகுதிக்கான நிர்மானப்பணிகள் 03 கட்டங்களாக செயற்படுத்தப்படுகின்றது. முதலாவது கட்டமாக (நிலத்தூண்கள் கட்டுதல்) இரண்டாவது கட்டமாக (கொங்ரீட் கட்டமைப்பு) என்பன ஏலவே பூர்த்தியாக்கப்பட்டுள்ளன. அதே வேளை மூன்றாம் கட்டமான கட்டடத்தின் (செப்பனிடும் பணி) வேலைகள் 2014 ஆம் ஆண்டுக்காண மூலதனம் ஒதுக்கப்படாமையால் நிறுத்தப்பட்டுள்ளது.

❖ **சரியான நேரத்திற்கு அமைச்சிற்கு அபிவிருத்தி வேலைத்திட்டம் தொடர்பிலான முன்னேற்ற அறிக்கைகளை சமர்ப்பித்தல்**

## 06. நிதிப்பிரிவால் செய்யப்படும் கடமைகளும் அறிக்கைகளும்

### 6.1 நிதிப்பிரிவால் செய்யப்படும் கடமைகள்

❖ ஆண்டு மதிப்பீடுகளை தயாரித்தல்

- ❖ ஆண்டு ஒதுக்கீட்டு கணக்குகளை சீராக்கல்
- ❖ களஞ்சிய முகாமைத்துவம்
- ❖ அரசாங்க உத்தியோகத்தர் முற்பணங்கள், பீ கணக்கு நடவடிக்கைகள்
- ❖ உறுதிச்சீட்டுகளுக்கான பணம் வழங்கல்
- ❖ சம்பளங்கள் படிகள் வழங்குவதும் கணக்குகளை பேணுதல்
- ❖ நிதி ஏடுகள், பேரேடுகள், பதிவேடுகள் என்பவற்றை பேணுதல்
- ❖ காசோலைகள் வழங்குதல்
- ❖ மாதாந்த கணக்குகளின் பொழிப்புகளைத்தயாரித்தல்
- ❖ திறைசேரி, கணக்காய்வாளர், குறித்த அமைச்சு ஆகியவர்களுக்கு கணக்குகளின் பொழிப்புகளை ச்சமர்ப்பித்தல்.

## 6.2 நிதி அறிக்கைகள்

**6.2.1. மீண்டுவரும்**

**6.2.2. மூலதனம்**

**6.2.3. முற்பணக் கணக்குகள்**

### மொத்தத் தேறிய ஒதுக்கீட்டுக்கும் உண்மையான மீண்டுவரும் செலவினத்திற்கும் இடையிலான வேறுபாட்டுக்குரிய விளக்கம்

**திணைக்களம்: முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்**

**செலவினத் தலைப்பு இல.: 202**

| நிகழ்ச்சித்திட்ட இல. | கருத்திட்ட இல. | உப-கருத்திட்ட இல. | விடயக் குறியீட்டு இல. | நிதிப்படுத்தல் (குறியீடு) | விபரம் | மொத்தத் தேறிய ஒதுக்கீடு ரூபா * | உண்மையான மீண்டுவரும் செலவினம் ரூபா | சேமிப்பு வீதம் % * |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | **மீண்டெழும் செலவினம்** | | | |
| | | | | | **ஆளுக்குரிய வேதனாதிகள்** | | | |
| 2 | 1 | 0 | 1001 | 11 | சம்பளங்களும் கூலிகளும் | 15,600,000 | 14,245,280 | 1,354,720 |
| 2 | 1 | 0 | 1002 | 11 | மேலதிக நேர சம்பளங்மும் பிறபடிகளும் | 683,000 | 673,785 | 9,215 |
| 2 | 1 | 0 | 1003 | 11 | ஏனைய கொடுப்பனவுகள் | 10,360,000 | 10,358,980 | 1,020 |
| | | | | | **பிரயாணச் செலவுகள்** | | | |
| 2 | 1 | 0 | 1101 | 11 | உள்ளூர் | 340,000 | 339,985 | 15 |
| 2 | 1 | 0 | 1102 | 11 | வெளியூர் | 800,000 | 694,912 | 105,088 |
| | | 0 | | | **வழங்கல்கள்** | | | |
| 2 | 1 | 0 | 1201 | 11 | எழுது கருவிகள் அலுவலகத் தேவைகளும் | 700,000 | 698,034 | 1,966 |
| 2 | 1 | 0 | 1202 | 11 | எரிபொருளும் | 1,000,000 | 800,782 | 199,218 |
| 2 | 1 | 0 | 1203 | 11 | உணவும் சீருடைகளும் | 60,000 | 60,000 | - |
| | | | | | **பராமரிப்பு செலவினம்** | | | |
| 2 | 1 | 0 | 1301 | 11 | வாகனங்கள் | 750,000 | 701,037 | 48,963 |
| 2 | 1 | 0 | 1302 | 11 | பொறித்தொகுதி, இயந்திர உபகரணங்கள் | 400,000 | 233,605 | 166,395 |
| 2 | 1 | 0 | 1303 | 11 | கட்டிடங்களும் கட்டமைப்புக்களும் | 195,000 | 194,958 | 42 |
| | | | | | **ஒப்பந்த சேவைகள்** | | | |
| 2 | 1 | 0 | 1401 | 11 | போக்குவரத்து | 300,000 | 31,300 | 268,700 |
| 2 | 1 | 0 | 1402 | 11 | தபால் மற்றும் தொலைத் தொடர்பகள் | 650,000 | 408,123 | 241,877 |
| 2 | 1 | 0 | 1403 | 11 | மின்சாரமும் நீரும் | 802,000 | 801,471 | 529 |
| 2 | 1 | 0 | 1404 | 11 | வாடகைகளும் உள்ளூர் வரிகளும் | 300,000 | 171,112 | 128,888 |
| | | | | | **ஏனையவை** | | | |
| 2 | 1 | 0 | 1405 | 11 | ஏனைய செலவினம் | 8,400,000 | 6,164,427 | 2,235,573 |
| 2 | 1 | 1 | 1501 | 11 | சீருடை | 5,000,000 | 4,958,538 | 41,462 |
| 2 | 1 | 2 | 1501 | 11 | புத்தகக்கொடுப்பனவு | 9,000,000 | 8,754,000 | 246,000 |
| 2 | 1 | 3 | 1501 | 11 | புத்தகங்கள் | 2,000,000 | 1,821,448 | 178,553 |
| 2 | 1 | 4 | 1405 | 11 | ஈத்தம்பழம் | 2,500,000 | 2,448,014 | 51,986 |
| | | | | | **மாற்றல்கள்** | | | |
| 2 | 1 | 0 | 1506 | 11 | ஆதனக்கடன் வட்டி | 100,000 | 95,512 | 4,848 |
| 2 | 1 | 8 | 1508 | 11 | குர்ஆன் மத்ரஸாக்களுக்கான கொடுப்பனவு | 700,000 | 696,000 | 4,000 |

(* தயவுசெய்து சுற்றுநிருபத்தின் பகுதி 5 இனைப் பார்க்கவும் )

**சேமிப்பு வீதத்தை தசமதானங்கள் இல்லாமல் குறிப்பிடுக

## முற்பண மற்றும் வைப்புக் கணக்குகளுக்கான கட்டுப்பாட்டுக் கணக்குகள் பற்றிய பொழிப்பு - 2014

**செலவினத் தலைப்பு இல.: 202** **திணைக்களம்: முஸ்லிம் சமய கலாசார பண்பாட்டலுவல்கள் திணைக்களம்**

| முற்பண/வைப்புக் கணக்கின் பெயர் | கணக்கு இலக்கம் | 2014.01.01 அன்றுள்ளவாறு ஆரம்ப மீதி | ஆண்டின் வரவுகள் | ஆண்டின் செலவுகள் | 2013.12.31 அன்றுள்ளவாறு இறுதி மீதி | 2013.12.31 அன்றுள்ளவாறு திறைசேரிக் கணக்கின் மீதி |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| I. அரச ஊழியர்களுக்கான முற்பணம் | 202011 | 6,074,327.85 | 1,772,545.00 | 1,300,492.85 | 6,546,380.00 | 6,546,380.00 |
| | 202012 | | 818,626.00 | 873,864.00 | -55,238.00 | -55,238.00 |
| | | **6,074,327.85** | **2,591,171.00** | **2,174,356.85** | **6,491,142.00** | **6,491,142.00** |
| II. ஏனைய முற்பணங்கள் | | | | | | |
| III. நானாவித முற்பணங்கள் | | | | | | |
| IV. வைப்புக் கணக்குகள் | 6000/0015/0084 | **16,001,529.97** | **300,690.64** | **721,669.00** | **16,422,508.33** | **16,422,508.33** |
| i. பொதுவைப்புக்கள் | | | | | | |
| ii. ஏனைய வைப்புக்கள் | | | | | | |

# கருத்திட்ட ரீதியான மூலதனச் செலவினம்

**செலவினத் தலைப்பு இல.: 202**

**திணைக்களம் : முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்**

**நிகழ்ச்சித்திட்ட இலக்கமும் தலைப்பும்: 02 அபிவிருத்திச் செயற்பாடுகள்**

**கருத்திட்ட இலக்கமும் தலைப்பும் : முஸ்லிம் சமய கலாசார அலுவல்களை**

| விடயக் குறியீடு | விடய இல. | நிதிப்படுத்தல் (குறியீடு) | விடயங்கள் சம்பந்தமான இலக்கம் | (1) மொத்த தேறிய ஒதுக்கீடு | (4) மொத்தச் செலவினம் | (5) தேறிய மீதி சேமிப்பு (மிகை) (3-4) |
|---|---|---|---|---|---|---|
| | | | | ரூபா | ரூபா | ரூபா |
| | | | **மூலதனச்சொத்துக்களின் புனரமைப்பும் மேம்பாடும்** | | | |
| 2001 | | 11 | கட்டிடங்களும் கட்டமைப்புகளும் | 200,000 | 192,150 | 7,850 |
| 2002 | | 11 | பொறித்தொகுதி இயந்திரம் உபகரணம் | 200,000 | 16,800 | 183,200 |
| 2003 | | 11 | வாகனங்கள் | 500,000 | 230,500 | 269,500 |
| | | | **மூலதனச்சொத்துக்களின் கொள்வனவு** | | | |
| 2102 | | 11 | தளபாடங்கள் காரியாலய உபகரணங்கள் | 300,000 | 291,968 | 8,032 |
| 2103 | | 11 | பொறித்தொகுதி இயந்திரம் உபகரணம் | 200,000 | 199,450 | 550 |
| | | | **கொள்திறன் கட்டுமானம்** | | | |
| 2401 | | 11 | அலுவலர் பயிற்சி | 150,000 | 150,000 | 0 |
| | | | **வேறு மூலதன செலவுகள்** | | | |
| 2502 | 6 | 11 | மீலாத் அபிவிருத்தி வேலை | 13,000,000 | 9,532,764 | 3,467,236 |
| 2502 | 7 | 11 | இஸ்லாமிய கலாச்சார நிலையம் | 6,000,000 | 5,299,359 | 700,641 |
| 2502 | 8 | 11 | காத்தான்குடி பள்ளிவாசல் நிர்மானம் | 10500000 | 6,491,847 | 4,008,153 |

**07. சமய மற்றும் கலாசார பிரிவினால் நிறைவேற்றப்படும் பணிகளாவன**

- ❖ அரபுப் பாடசாலைகளைப் பதிவு செய்தல், பாடவிதானங்களை தயாரித்துலும் அதன் நிரவாகம் தொடர்பிலான வேலையும்.
- ❖ ஹிப்ளுல் குர்ஆன் மத்ரஸாவைப் பதிவு செய்தலும், அதன் பாடவிதானத்தை தயாரித்தலும் அதன் நிர்வாகப் பணிகளைக் கவனித்தலும்.
- ❖ குர்ஆன் மத்ரஸாவைப் பதிவு செய்தலும், பாடவிதானத்தை தயார் செய்தலும் அதன் நிர்வாகப் பணியை கவனித்தலும்.
- ❖ அஹதியா (தகம்) பாடசாலைகளைப் பதிவு செய்தலும், பாடவிதானத்தை தயாரித்தலும்.
- ❖ அஹதியா (தகம்) பாடசாலைகளுக்கான சீறுடைகளை வினியோகித்தல்.
- ❖ அஹதியா தம்மப் பாடசாலை ஆசிரியர்களுக்கு நூல்களுக்கான படி வழங்குதல்.
- ❖ ஹஜ் யாத்திரைகளுக்கான நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தல்.
- ❖ வதிவிட விசாக்களுக்கு சிபாரிசு செயதல்.
- ❖ சமய மற்றும் சமய நிறுவனங்களுக்கான நூல்கள் மற்றும் பண்டங்கள் தொடர்பில் சுங்கத்தீர்வை நிவாரணங்களைச் சிபாரிசு செய்தல்.
- ❖ அரபுப் பாடசாலையிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களை எகிப்திலுள்ள அல் – அஸ்ஹர் பல்கலைக்கழகப் புலமைப்பரிசில் திட்டத்திற்கு உட்படுத்தல்.

இது தொடர்பில் அரபுப் பாடசாலைகளில் இருந்து (50) விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதுடன், விண்ணப்பதாரிகளில் 05 இமாம்கள் தெரிவுசெய்யப்பட்டு இஸ்லாம் சரீஆ 03 மாதக் கல்விப் பாடநெறிக்கென எகிப்திலுள்ள அல் - அஸ்ஹர் பலகலைக்கழகத்திற்கும், 10 அரபுப்பாடசாலை மாணவர்கள் (மௌலவிமாணவர்கள்) தெரிவு செய்யப்பட்டு தெரிவுசெய்யப்பட்டு இஸ்லாம் கல்விசார் பட்டப் பாடநெறிகளுக்கெனத் தெரிவு செய்யப்பட்டனர். வெளிநாடுகளில் உயர் கல்வி நிறுவனங்களில் அனுமதிகோரும் மாணவர்களுக்கான சிபார்சுக் கடிதங்களை இத்திணைக்களம் வழங்குகின்றது.

- ❖ ரம்ழான் காலத்தில் எகிப்து மற்றும் ஈரான் நாடுகளின் சமயத்தலைவர்களை அழைத்து மத நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துகின்றது.

ரமழான் காலத்தின் போதும் எகிப்தில் இருந்து ஒரு மதப்பிரதிநிதிகள் புனித அல்குர்ஆனைப் பற்றி விளக்கம் அளிப்பதற்காக இங்கு வந்து அவர்கள் இங்கு தங்கி இருந்த காலத்தில் அவர்களுக்கான எல்லா வசதிகளையும் திணைக்களம் செய்து உதவியதோடு அவர்களுக்கான மொழிபெயர்ப்பாளரையும் ஒழுங்கு செய்து கொடுத்தது. இப்பிரதிநிதிகள் பொலன்நறுவை, அநுராதபுரம், மட்டக்களப்பு,அம்பார் கொழும்பு, கண்டி ஆகிய மாவட்டங்களில் தமது சமயப்பணியை மேற்கொள்வதில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டனர்.

- ❖ ரம்ழான் நாட்களின் போது பள்ளிவாசல்களுக்கு பேரீச்சம் பழம் வினியோகிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ரமழான் காலத்தின் போது சவுதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய நாடுகளிலிருந்து நன்கொடையாக கிடைக்கப்பெற்ற 348 மெற்றிக் தொன் பேரீச்சம் பழம் மாவட்ட மட்டத்தில் பிரதான பள்ளிவாசல்களினூடாக வினியோகிக்கப்பட்டது. இத்தேவைக்கென மீண்டு வரும் செலவினத்தின் கீழ் இத்திணைக்களத்திற்கு ரூபா 09 மில்லியன் ஒதுக்கப்பட்டது.

- ❖ தேசிய மீலாத் நபி விழாக் கொண்டாட்டங்களை அரசாங்க விழாவாக நடத்துதல்.

உலகம் பூராவிலுள்ள முஸ்லிம்கள் முஹம்மத் நபி பெருமானாரின் பிறந்த நாள் 2014.01.14 அன்று கொண்டாடப்பட்டதுடன் இது தொடர்பிலான கொண்டாட்டங்கள் பிரதானமாக களுத்துறை மாவட்டத்தில் நடாத்தப்பட்டது.

❖ தேசிய மீலாத் தினததை முன்னிட்டு மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் போட்டிகளை நடாத்துதல்.

இப் போட்டிகள் ஆண்டுதோறும் நடாத்தப்படுவதுடன் பாடசாலை மாணவர்களுடைய பேச்சுப் போட்டிகள், சிறுகதை எழுதுதல், கட்டுரை எழுதுதல், கவிதை, அரபு எழுத்தனி, அல்குர்ஆனை மனனம், கிறாஅத் போன்ற போட்டிகள் மாகாணக் கல்வித் திணைக்களங்களின் கீழ் நடாத்தப்படுவதுடன் இப்போட்டிகளில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறுபவர்கள் அகில இலங்கை இறுதிப் போட்டியில் கலந்து கொள்ள அனுப்பிவைக்கப்பட்டு வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவர்.

| **2014 ஆம் ஆண்டுக்கான ஏற்பாடுகள் (ரூ.மில்லியன்)** | **31.12.2014 வரைக்குமான நிதிகள் முன்னேற்றம் (ரூ. மில்லியன்)** | **31.12.2014 வரைக்குமான பௌதீக முனனேற்றம்** |
|---|---|---|
| 2.3 | 2.0 | எல்லா மாகாணங்களிலும் போட்டிகள் நடாத்தப்பட்டு, இறுதிப்போட்டிகள் கொழும்பு - 12" பாத்திமா கல்லூரியில் 2014 நவம்பர் 29,30 ஆம் திகதிகளில் நடைபெற்றது. |

❖ வருடாந்தம் "கலா பூசணம்" விருதுக்கு ஒவ்வொரு வருடமும் முஸ்லிம் கலைஞர்களைத் தெரிவு செய்தல்.

❖ முஸ்லிம் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் அவர்களின் வெளியீடுகளைக் கொள்முதல் செய்து அவற்றை முஸ்லிம் பாடசாலைகளிலுள்ள நூலகங்களுக்கு வினியோகித்தல்.

❖ முஸ்லிம் குருக்களுக்கு (மௌலவி) அடையாள அட்கைள் வழங்குதல்.

2014 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற 862 விண்ணப்பங்களில் 2014.12.31 வரையில் 110 மௌலவி அடையாள அட்டைகள் வினியோகிக்கப்பட்டுள்ளது. ஏனைய விண்ணப்பங்கள் வினியோகிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

❖ அல்குர்ஆன் போட்டிகளை நடாத்தி இந்தப் போட்டிகளின் மூலமாக சர்வதேசப்போட்டிகளுக்காக பொருத்தமானவர்களைத் தெரிவு செய்தல்.

❖ அரசாங்கக் கொண்டாட்டங்களில் இஸ்லாம் மத குருக்கள் பிரதிநித்துவப்படுத்தப்படும் விதத்தில் ஒருங்கிணைத்தலும், தேவையான பணியை நிறைவேற்றுதலும்.

| | | **2014 ஆம் ஆண்டுக்கான ஏற்பாடுகள் (ரூ.மி)** | **31.12.2014 வரைக்குமான முன்னேற்றம்** | |
|---|---|---|---|---|
| | | | **பௌதீக** | **நிதிசார் (ரூ.மில்லியன்)** |
| i | சீறுடை வழங்குதல் | 5.0 | இந்த ஆண்டுக்கான சீறுடைகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. | 4.95 |
| ii | நூல்களுக்கான படி | 9.0 | புத்தகக் கொள்வனவுக்கான கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. | 8.75 |
| iii | அஹதியா தம்மப் பாடசாலை பாட விதானத்துக்கான தயாரிக்கப்பட்ட 09 பாடப்புத்தகங்கள் | 2.0 | பாடப்புத்தகம் தயாரித்து அச்சிடல் முடிக்கப்பட்டுள்ளது. | 1.82 |

| | | | | |
|---|---|---|---|---|
| | அச்சிடுதல். | | | |
| iv | அஹதிய்யா (தகம்) பாடசாலை வினாத்தாள்கள் மதிப்பிடுவதற்கான நிதி ஏற்பாடு | 0.35 | பரீட்சைகள் நடத்தப்பட்டுள்ளது. | 0.35 |

## 08. வக்பு மற்றும் பள்ளிவாசல்கள் நிருவாகப் பிரிவால் நடாத்தப்பட்ட செயல்கள்.

❖ பள்ளிவாசல்கள் மற்றும் நிதியக் கட்டத்தின் ஏற்பாடுகளைச் செயன்முறைப்படுத்துதல். அதன்பிரகாரம்

- நாட்டின் சகல மாவட்டங்களிலுமுள்ள பள்ளிவாசல்களின் நிருவாகக் கடமைகளை நடாத்துதல்.
- பள்ளிவாசல்களைப் பதிவு செய்தல்.
- பள்ளிவாசல்களிலுள்ள நம்பிக்கைப் பொறுப்பாளர்களுக்கு நியமனங்களை வழங்குதல்.
- ஒவ்வொரு வருடத்திற்குமான பள்ளிவாசல் கணக்கறிக்கைகளை பெறல். அக்கூற்றுகளைச் செவ்வைப்பார்த்தல். முஸ்லிம் தரும நிதி, நம்பிக்கைப் பொறுப்புகளுக்கான உதவுதொகைகளைப் பெற்றுக்கொள்வதும் அந்த நம்பிக்கைப் பொறுப்புளைப் பேணுதலும்.
- முஸ்லிம் பள்ளிவாசல் பற்றியதான பிரச்சினைகள், நம்பிக்கையாளர் சபை மேன்முறையீடுகள், மனுக்களை ஒருங்கினைத்தலும், தீர்க்க முடியாத பிரச்சினைகளை வக்பு சபைக்கு சமர்ப்பித்தல்.

**வக்பு சபை**

இந்த ஆண்டு காலத்தின போதும் 10 புதிய பள்ளிவாசல்கள் பதியப்பட்ட அதே வேளை, 350 பள்ளிவாசல் நம்பிக்கையாளரகளுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது. வக்பு சபையின் தீர்ப்புக்கு எதிராக வக்பு நியாய சபைக்கு முன்வைக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 09 ஆகும். இதில் 2 வழக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கும், 01 வழக்கு நீதவான் நீதிமன்றத்திற்கும் முன்வைத்துள்ளது.

**வக்பு நியாய சபை**

வக்பு நியாய சபை நீதிச்சேவை ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்ட 03 அங்கத்தவர்களைக் கொண்டிருப்பதுடன் இரண்டு மாதாந்தக் கூட்டங்கள் நடாத்தப்படும். 2014 ஆம் ஆண்டின் போது பள்ளிவாசல்களால் சமர்ப்பிக்கப்பட்ட 09 வழக்குகள் நியாய சபைக்கு சமரப்பிக்கப்பட்டுள்ளதுடன், 05 வழக்கு விசாரிக்கப்பட்டுக்கொண்டிருப்பதுடன் இதற்கு மேலதிகமாக 2013 ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட் வழக்குகளில் 2 விசாரிக்கபட்டுவருகின்றதுடன் 06 வழக்குகளின் தொடர்பில் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

## 09. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு மற்றும் புலனாய்வு பிரிவால் செய்யப்படும் நடவடிக்கைகள்

திணைக்களத்தின் நிதி மற்றும் நிருவாக உள்ளகக் கட்டுப்பாட்டுக் கடமைகளை ஒழுங்காகப் பேணுவதற்கென கணககாய்வு நடாத்தப்படுகின்றது.

- ❖ கணக்காய்வு சார் வினாக்களுக்கு விடை அளித்தல்.
- ❖ பள்ளிவாசல்களைச் சோதனையிடுதல், பள்ளிவாசல்களின் வரவு செலவுக் கூற்றுக்களைக் கணக்காய்வு செய்தலும் புலனாய்வு செய்தலும்.
- ❖ வக்பு சபையினால் கிடைக்கப்பெறும் மனுக்கள் மற்றும் முறைப்பாடுகள் பரிசீலனை செய்யப்பட்டு அறிக்கை சமர்ப்பித்தல்.
- ❖ ஆண்டுக் கணக்குகளில் கணக்காய்வும் சோதனை

ஆண்டு 2014 அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு வினாக்களின் எண்ணிக்கை – 02

ஆண்டு 2014 கணக்காய்வாளர் அதிபதியின் கணக்காய்வு வினாக்களின் எண்ணிக்கை – 02

## 10. திணைக்களத்தின் கடமைச் செயற்பாட்டுக் கெதிரான தடைகளும இடர்களும்

**ஆண்டு 2014.12.31 வரைக்கும் திணைக்களத்தின் மூலதனம் மற்றும் மீண்டுவரும் செலவினம் என்பன தொடர்பிலான பொழிப்பு கீழே தரப்பட்டுள்ளது.**

| | 2014 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடு | | 31.12.2014 அன்றிலிருநதவாறான மொத்தச் செலவினம் | |
|---|---|---|---|---|
| | ஆண்டு மதிப்பீடு ரூ | மொத்த நிகர ஏற்பாடு ரூ | செலவினம் | நூற்றுவீதம் |
| மூலதனச் செலவினம் | 20,550,000.00 | 31,050,000.00 | 22,404,837.75 | 72% |
| மீண்டுவரும் செலவினம் | 71,140,000.00 | 60,640,000.00 | 55,350,943.41 | 91% |
| மொத்தம் | **91,690,000.00** | **91,690,000.00** | 77,755,781.16 | 84.80% |

மேலே காட்டப்பட்ட செலவின விபரங்களின் படி திணைக்கள செயற்பாடுகளை முறையாக முன்னெடுப்பதற்கு போதுமான அளவு நேரத்துக்கு முன்பே கட்டு நிதி கிடைக்கப் பெறாமை கடமைகளை நிறைவேற்றுவதில் பல இடர்களைத் தோற்றுவித்தது. சகல மூலதன செயற்பாட்டில் 84.80% செலவு காட்ப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக குறைநிரப்பு நிதியிலிருந்தான செலவுக் கட்டுப்பாடு இதற்கு உரித்தான மூலதன செலவினம் செய்யப்படாததற்கு காரணமாகியது என்பது அறிவிக்கப்பட்டுள்ளது.

திணைக்களத்தின் சகல மட்டங்களிலும் நிலவிய வெற்றிடங்கள் அதிலும் விசேடமாக நிறைவேற்றுத் தரத்திலான வெற்றிடங்கள் நிலவியமை திணைக்கள செயற்பாட்டு இலக்குகளை எய்துவதில் தடையாய் இருந்தது.

திணைக்களப் உத்தியோகத்தர்களுக்கான போதிய இடவசதி மற்றும் இதனுடன் தொடர்புடைய ஏனைய வசதிகளில் இல்லாமையுமே திணைக்களம் சார் கடமைகளை நிறைவேற்றுவதில் பல இடர்களைத் தோற்றுவித்தது.

மேலே சொல்லப்பட்ட இடர்கள் மற்றும் தடைகளின் மத்தியிலும் 2014 ஆம் ஆண்டில் குறிக்கோள்களை எய்துவதற்கும் இலக்குகளை அடைவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| இணையதளம் | www.muslimaffars.gov.lk | | |
| இலத்திரனியல் முகவரி | dir@muslimaffairs.gov.lk | | |
| தொலைபேசி இலக்கம் | பணிப்பாளர் | - | 011-2675367 |
| | அலுவலகம் | - | 011-2672646 |
| தொலைநகல் இலக்கம் | 011-2692147 | | |